**இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகள்- 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அதிகாரசபை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் அத் துணைக் கம்பனிகள் சிறிய மற்றும் | துணைக் கம்பனிகளால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான | கம்பனியால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு நியமம் |

| | | | |
|---|---|---|---|
| | நடுத்தர அளவிலான வியாபரங்களுக்கான கணக்கீட்டு நியமங்களையும் பின்பற்றியிருந்த போதிலும், கம்பனியால் பின்பற்றப்படுகின்ற அடிப்படை காரணமாக நிதிக்கூற்றுக்களுக்கான தாக்கம் பற்றி வெளிக்காட்டப்படவில்லை. | கணக்கீட்டு நிமயங்களை பின்பற்றுவதன் அடிப்படையினை 2019 இற்கான கூட்டிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | காரணமாக ஒன்றிணைக்கப் பட்ட நிதிக் கூற்றுக்களுக்கான தாக்கம் வெளிக் காட்டப்பட வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் மகாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியினதும் மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியினதும் நடைமுறைச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக கிரயங்கள் முறையே ரூபா 3,058,326 மற்றும் ரூபா 20,713,263 ஆன நிலையான சொத்துக்கள் பூரணமாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அந்நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு சீராக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறிப்பிட்ட கம்பனிகளுக்கு அறிவுத்தப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நிலையான சொத்துக்களுக்குப் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இன் பிரகாரம் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 156,572,000 ஆன பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அடிப்படையானது குறிப்புக்களின் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை. | இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையினை குறிப்புக்களின் மூலம் 2019 ஆம் வருடத்தில் கூட்டிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிக்காட்டப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மதிப்பிடலின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்குச் சொந்தமற்ற இரு காணிகள் ரூபா 466,325,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுக்கப்பட்டிருந்தன. மேலும் அதிகாரசபையால் 1984 - 1989 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 64,320,853 பெறுமதியான 2 காணித் துண்டுகள் கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இக்காணி இரண்டும் அரசின் காணிகளாகும். அதிகார சபைக்கு உரித்தற்ற வகையில் 2019 இல் புத்தகங்களில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களை பிழையின்றி கணக்கிலெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் அருளாகன்வில விதை வயலின் இறுதி இருப்பு கூடுதலாகக் காட்டப்பட்டு 2017 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் மீண்டும் ஆகக்கூடுதலாகக் காட்டப்பட்ட கணக்குகளில் சீராக்கியதன் காரணமாக மீளாய்வாண்டில் இலாபம் ரூபா 5,286,227 இனால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது | 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் திருத்தப்படும். | நிதிக் கூற்றுக்கள் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | காலனி மக்களுக்கு கடன் வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து பெறப்பட்டு வங்கிக்கு வழங்கப்பட்ட ரூபா 147,750,000 பணத்தில் கடன் வழங்கப்பட்ட அளவு கடன்பட்டோர் மீதியாகவும் மிகுதிப் பணம் வங்கிப்பண முன்னால் கொண்டு சென்ற மீதியாகவும் கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்நிதியில் கொடுக்கப்பட்ட கடன்களின் அளவு, அறவிடப்பட்ட கடன்களின் அளவு மற்றும் பெறப்பட்ட வட்டி வருமானம் வெளிக் காட்டுவதற்காக குறிப்புக்கள் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | திறைசேரியின் மானியங்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடும் செயற்திட்டத்தின் அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்ட கிரயம் ரூபா 671,503,748 ஆன நிலையான சொத்துக்களின் பகுதியான ரூபா 201,640,037 இற்கு மீள் மதிப்பிட்படப்டு கணக்கில் எடுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அச்செயற்திட்டத்தில் செயற்திட்ட முகாமைத்துவ வசதிகளின் கீழ் நானாவித ஒப்பந்தங்களினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 4,369,384 ஆன சொத்துக்கள் கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தில் பெறப்பட்ட சகல சொத்துக்களும் மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் விரைவில் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் ஒரு வகுப்பிற்கு உரித்தான சகல சொத்துக்களும் மீள் மதிப்பிடப்பட்டு குறிப்பிட்ட கணக்குகளின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (உ) | மீளாய்வாண்டின் ‘சீ’ வலயத்தில் கிடைக்க வேண்டிய நிலுவை குத்தகைப் பணம் கணக்கீடு செய்யப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களின் மூலம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய நிலுவை குத்தகைத் தொகையை கணக்கீட்டு கணக்கில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஊ) | மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு ரூபா 2,188 மில்லியன் மூலதன மானியங்கள் கிடைக்கப் பெற்றும் அம்மானியங்களை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டு கொள்கைகளை தயாரிக்கப்படாமையால் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானமானது முறையாக வருமானமாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக திரட்டப்பட்ட நிதி அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 24,647 மில்லியன் ஆக இருந்தது. | அரச மானியம் கணக்கிடுவதற்காக கணக்கீட்டு கொள்கை ஒன்றை இனங்கண்டு 2019 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க அரச மானியம் கணக்கிடப்படுவதற்கு குறிப்பிட்ட கொள்கையொன்றை தயாரித்து அதன் பிரகாரம் அரச மானியத்தை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (எ) | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 500,000 படி ரூபா 1,000,000 ஆன ஏழுநாள் வைப்புக்கள் இரண்டு முறையே 3 | ஏழுநாள் வைப்பிற்காக வட்டி அவ் வைப்புக்கள் நீக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மட்டும் கொடுக்கப்படுவதாக | முதலீடுகள் சரியாகவும் மற்றும் குறிப்பிட்ட நோக்கத்தில் செய்யப்பட வேண்டுமென்பதுடன் அது சம்பந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் மற்றும் 10.5 சதவீதம் வருடாந்த வட்டி வருமானத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்தன. அவ்வட்டி வருமானம் முதலீடு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வங்கியால் கூறப்பட்டிருந்தது. | தொடர் மதிப்பீடுகளின் மூலம் அதிக பயனைப் பெறக் கூடியதாக முதலீடுகள் செய்யப்பட வேண்டியமை. |
| (ஏ) | 2016 ஆம் ஆண்டில் முன்னைய வருடத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 20,960,226 ஆன நிலுவை வாடகை வருமானம் வருட வருமானத்திற்குரியதாக காட்டப்பட்ட பிழையைத் திருத்தும் போது திரட்டப்பட்ட நட்டத்திற்கு செலவு வைக்கப்பட்டு பெற வேண்டிய வாடகைக் கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் முன்னைய வருடம் மற்றும் மீளாய்வாண்டின் திரட்டப்பட்ட நட்டக்கணக்கு வரவு வைக்கப்பட்டு பெறவேண்டிய வாடகைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் வருட இறுதியில் திரட்டப்பட்ட நட்டம் ரூபா 83,840,904 ஆல் குறைக்கப்பட்டும் பெற வேண்டிய வாடகைக் கணக்கு அத்தொகையால் அதிகரித்தும் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட வாடகை தொகை பிழையின்றி இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் கணக்கிடப்படுவதற்கு அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது சிறு அளவிலான நீர் மின் சக்தி பொறிகளுக்கான பெற வேண்டிய ரூபா 5,373,634 ஆன உரிமங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் வருடத்தில் திருத்தப்படும். | வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க பெற வேண்டிய உரிமங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திச் செலவுகளில் உருவாக்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டிற்குள் | 2019 ஆம் வருடத்தில் செயற்படுத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது. | மூலதனச் செலவினம் மூலம் உருவாக்கப்படும் மூலதனம் சொத்துக்கள் இனங்காணப்படுவதற்கும் மற்றும் கணக்கிடப்படுவதற்கும் கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்ற புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான செலவுகள் ரூபா 2,182 மில்லியன் ஆகும். | | |
| (ஓ) | அதிகார சபையால் நிர்வகிக்கப்படும் 10 வலயங்கள் அரச காணி 637,810 ஹெக்டயர், 12 அணைக்கட்டுக்கள், 8,708 கி.மீ கால்வாய்கள், 463 தாங்கிகள், 1,127.5 கி.மீ வீதிகள் மற்றும் 1,046 நானாவித நீர்வள மூலகங்கள் என்பவற்றின் பராமரிப்பு மற்றும் திருத்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அச்சொத்துக்கள் அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. எனினும், அச்சொத்துக்களுக்கான விபரங்கள் விபரக் குறிப்புக்களின் மூலம் அல்லது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் செய்யப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. | இச்சொத்து அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கை மற்றும் சம்பந்தப்படுதல் மற்றும் அச்சொத்துக்களின் நிர்வாக உரிமை அதிகாரசபைக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டதுடன் அச் சொத்து சம்பந்தமான மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை அத்துடன் இச்சொத்துக்களுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படும் ஏனைய வெளியார் வளங்கள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தி தீர்ப்பதற்கான கொள்கையினை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஔ) | உடவலவ்வ வலயத்திற்கு உரித்தான 3 வீடுகள், விடுமுறை விடுதி மற்றும் கட்டிடத்திற்கான கிரயம் இனங்காணப்பட்டு கணக்கில் காட்டப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டில் கணக்கில் காட்டப்படும். | அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கில் காட்டப்பட வேண்டியமை. |
| (க) | நிராவிய வயலிற்காக மொரகஹந்த செயற்திட்டம் மற்றம் ஆற்றங்கரை அலுவலகத்தில் 2010 - 2016 காலப்பகுதியினுள் பெறப்பட்ட 12 துவிச்சக்கர வண்டிகள், 02 மல்டி சொப்பர் இயந்திரங்கள், ஒரு பால்ப் போக்குவரத்து லொறி, 3 டிராக்கடர்கள், 04 பண்ணைகள் கட்டுப்பாட்டுக் | மூன்று துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பால்ப் போக்குவரத்து லொறி என்பன அதிகாரசபைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் மிகுதிச் சொத்துக்கள் மாற்றப்பட்டுக் கணக்கில் காட்டப்படும். | அதிகாரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் இனங்காணப்பட்டுக் கணக்கில் காட்டப்பட வேண்டியமை. |

கட்டிடங்கள், 02 மின்சார நிறுக்கும் உபகரணங்கள் மற்றும் பெய்லிங் இயந்திரம் ஒன்று போன்ற சொத்துக்கள் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| மகாவலி கால்நடை வளங்கள் கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி | 418,871,000 | 416,176,219 | 2,694,781 | வேறுபாட்டிற்கான காரணம் கணடு பிடிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | வேறுபாடு பரிசோதனை செய்யப்பட்டுத் திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

### 1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வியாபார (தனியார்) கம்பனி | 14,117,550 | 5 வருடங்களுக்கு கீழ் | கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொங்கற் கணக்கு 2019 ஆம் வருடத்தில் திருத்தம் செய்யப்படும். | இனங்காணப்படாத கணக்குகள் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) முதலீடு | 20,477,000 | பங்குச் சான்றிதழ் | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அக்கம்பனியின் செயலாளரிடமிருந்து பெறப்பட்டு இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட மீதி உறுதிப் படுத்தப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | சேமிப்புக் கணக்கு | 2,632,908 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் பாஸ் புத்தகம் | அறிக்கைகள் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | நிலையான வைப்பு | 727,481 | வைப்புச் சான்றிதழ், மீதி உறுதிப்படுத்தல் | - மேற்படி - | - மேற்படி - |

## 1.6 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஜாவத்தைப் பகுதியில் அமைந்துள்ள வெளித்தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்ற 13 கட்டிடங்கள் சம்பந்தமாக மதிப்பீட்டு அறிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய வாடகை அறவிடப்பட்டதாக காட்டப்பட்டிருப்பினும் ரூபா 35,112,000 ஆன தொகை 2019 வருடத்தின் செப்தெம்பர் வரையில் அறவிடப்பட்டிருக்க வில்லை. அதிகாரசபையில் அக்கட்டிடத்திற்காக மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணப் பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 10,616,946 ஆன தொகை குறிப்பிட்ட வெளித்தரப்பினரால் மீள் நிரப்பப் பட்டிருக்கவில்லை. | மின்சார மற்றும் நீர்ப் பட்டியல்களுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையில் ரூபா 1,815,490 ஆனது மீள்நிரப்பப்பட்டதுடன் மிகுதி ரூபா 8,801,455 ஆனது மீள் நிரப்பப்படுவதற்காகக் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய வாடகை அறவிடப் படுவதற்கான மற்றும் செய்யப்பட்ட செலவுகளை மீள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 896,499,000 ஆன பெறவேண்டிய வாடகை வருமானமானதுடன் அவற்றுள் ரூபா 428,065,000 ஆனது 5 வருடங்களுக்கும் ரூபா 157,225,000 ஆனது 3 வருடங்கள் தொடக்கம் 05 வரையிலுமான காலத்திற்கு மேற்பட்டதாக காணப்பட்டது. வாடகை வருமானம் சேகரிப்பதற்குரிய நடைமுறை மற்றும் கட்டளைகள் செயற்படுத்தப் படாமையே நிலுவையான வாடகை வருமானம் வருடத்திற்குள் அதிகரிப்பதற்கான காரணமாக அமைந்தது. | திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை வருமானம் சேகரிப்பதற்குரிய முறைகள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் குத்தகை வருமானத்தை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 454,398,000 ஆனது வேலை ஆரம்ப முற்பணமாக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 3,467,000 ஆனது 5 வருடங்களுக்கு மேற்பட்டதாகவும் அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வேலை முற்பணங்களை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 1.6.2 கொடுக்க வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் கொடுக்க வேண்டிய நிலுவை ரூபா 651,986,000 என்பதுடன் அவற்றுள் ரூபா 46,443,000 ஆனது 5 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்பட்டது. அந்நிலுவையினுள் உள்ளடங்கும் ரூபா 7,747,000 ஆன வைப்புப் பணங்களுக்கான ஒப்பந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டதாக கண்டறிந்து வைப்புப் பணத்தை தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 5 வருடங்களுக்கு மேலான பிடிமாணத் தொகை ரூபா 7,747,000 ஒப்பந்தக்காரரினால் இதுவரையில் கோரப்படாமையினால் வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுப்போம். | பிடிமாணத் தொகைகளைத் தீர்க்கப்படுவதற்கான அல்லது மேலும் பொறுப்பற்ற மீதிகளை இனங்கண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | ஆரம்ப வேலை நிர்வாகத் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பிரிவின் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 780,070 ஆன வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் மற்றும் ரூபா 460,701 ஆன நிலுவை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இனங்காணப்பட்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இல் திருத்தப்படும் | நீண்டகாலமாக தீர்க்கப்படாத மீதிகளை அல்லது மேலும் பொறுப்பற்ற மீதிகளை இனங்கண்டு வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் 10(ஆ) பிரிவு | 12 மாத காலப்பகுதிக்குள் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கல்களுக்கான முழுப்பெறுமதி ரூபா 12 மில்லியனுக்கு அதிகமாயின் பெயரிடப்பட்ட சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெறுமதி வரிக்காக பதிவு செய்யப்படல் வேண்டும். ஆனால் அதிகாரசபை வருமான மூலகங்களிலிருந்து முன்னைய வருடத்தில் ரூபா 93 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 152 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்வதற்கான முன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க அரச வியாபாரச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 5 மாதங்கள் தாமதமாக 2019 யூலை 31 ஆந் திகதியில் கணக்காய்விற்குச் | கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கு முறைமை செயற்படுத்தப் படாமையினால் மற்றும் சொத்து மீள்மதிப்பீடு செய்வதற்கான காரணத்தால் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின 2.3.3 ஆம் பந்தி | அலுவலர்கள் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்படுவதற்கு அரசின் தேவைப்பாடு காரணமாக முழுநேர அடிப்படையில் 5 வருடங்கள் அல்லது சம்பளமற்ற அடிப்படையில் சேவையாற்றுபவரின் கோரிக்கைக்கு இணங்க 5 வருடங்கள் மட்டுமே ஆகும். ஆனால் 3 அலுவலகர்கள் 10 வருடத்திற்கும் அதிக காலமாக அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் செயற்திட்டத்தின் சேவை காரணமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கைக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இறுதிக் கட்டமான செயற்திட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட சேவைகளுக்கு அச்செயற்திட்டம் முடிவடைந்த பின் விடுவிக்கப்படுவதற்கு அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் செயற்திட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்கள் மிகுந்த அனுபவத்தின் கூட்டிணைக்கப்பட்ட நீர் ஆதார மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்தின் சேவைக்காக ஈடுபடுத்துவதற்கான அனுமதி கோரப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுப்பப்பட்டுள்ளது. | செயற் திட்டத்திற்காக அலுவலகர்கள் விடுவிக்கப்படும் போது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | அதிகாரசபையின் நிதி செயற்பணிக் கோவையின் 1.5.1 ஆம் பந்தி மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் 02/2012 மற்றும் 2012 மார்ச் 15 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | முற்பணம் பெறப்பட்ட பணி முடிவடைந்து 07 நாட்களுக்குள் முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 10 வலயங்கள் மற்றும் 02 பிரிவுகளுக்குரிய ஓராண்டிற்கு மேற்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 175,963,000 ஆனவை வழங்கல் முற்பணமாக இருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | முற்பணத் தொகை பெறப்பட்ட அலுவலர்கள் முடிவடைந்த பின் உடனடியாக தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) மற்றும் (இ) பிரிவுகள் | பெறுகை நிறுவனத்தினால் குறைந்தளவு மூன்று வருடங்களுக்காக இலக்கிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கிப் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். அடுத்துவரும் வருடத்திற்கான பெறுகை நடவடிக்கைகளின் விபரங்கள் தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டுமெனினும் அதிகாரசபையால் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. எதிர்வருடத்திற்கான பெறுகைத் திட்டம் அவ் வருடத்தின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டிருக்க வில்லை. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஊ) | பெறுகை கைநூல் வழிகாட்டியின் 4.1.(ஈ) | ஆரம்ப பெறுகைத் திட்டம் நிரந்தரமாக முறைமைப்படுத்து வதற்கும் மற்றும் நாளதுவரையாக்குவ தற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும் அதிகாரசபையால் மீளாய்வாண்டில் பெறுகைத்திட்டம் அதன்படி நாளதுவரையாக்கப் படாமையுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தொழிற்பாடுகளுடன் பெறுகைத் திட்டத்தில் | - மேற்படி - | - மேற்படி - |

உள்ளடக்கப்பட்ட தொழிற்பாடுகளில் வேறுபாடுகள் காணப்பட்டன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 423,600,000 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டமானது ரூபா 437,478,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,878,000 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்கான செலவுகளில் ஏற்பட்ட குறைவே பிரதான காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 வருடத்தில் கடன் கொடுப்பதற்காக சுழலும் நிதியத்தை நிறுவுவதற்காக ரூபா 48 மில்லியன் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்ததுடன் கடன் கொடுப்பதற்காக 2019 வருடம் வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புப் பெறுமதி ரூபா 88.2 மில்லியன் என்பதுடன் சாதாரணமாக வழங்கப்படும் வட்டியை விடக் குறைந்தளவான 4 சதவீதத்தின் கீழ் இந்நிதி நீண்ட காலத்திற்கு வங்கியில் வைப்பிலிடப்பட்டமையால் சிக்கனமற்ற நடவடிக்கையாகக் காணப்பட்டதுடன் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இத்தொகையை மீண்டும் வழங்குமாறு பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்குரிய வட்டி வழங்குவதற்கான அனுமதிக்காக அவ்வங்கியின் “சொத்தக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவக் குழு” வின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதாக வங்கியினால் அறிவிக்கப்பட்டது. | நீண்டகாலமாக வங்கியில் இடப்பட்ட தொகை மீண்டும் பெறப்பட்டு பொருளாதார ரீதியில் பயனுள்ள நடவடிக்கை களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 8,550,788 க்கு செலவிடப்பட்டு திருத்தப்பட்ட கொத்மலையிலுள்ள பொறியியலாளரின் அலுவலகத்திற்கான பாரந்தூக்கி | 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் ஏற்பாடுகளின்மை காரணமாக திருத்தங்கள் செய்யப்பட வில்லையாயினும் 2016 | திருத்தங்களைச் செய்வதுடன் பாவனைக்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் ஒன்று எவ்வித திருத்தங்களும் செய்யாத காரணத்தால் 2017 திசெம்பர் 29 இலிருந்து 2019 மே வரையில் விளைவற்றதாகக் காணப்பட்டது. | மீண்டும் மதிப்பீடு பெறப்பட்டு 2017 திசெம்பர் 29 இல் என்ஜின் இறக்குமதி செய்யப்பட்டு செயற்படுத்தப் பட்டிருந்தது அதில் பிழைகள் அறிக்கையிடப் படாதிருந்ததுடன் பாரந்தூக்கியின் Boom ஒன்று செயற்படுத்தப்பட்ட போது 2 பெரிய குழாய்கள் வெடித்தன. அதில் முறைமைகள் அனைத்தும் விட உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் முகவரிடமிருந்து 2018 ஆம் வருடத்தில் மதிப்பீடு பெறப்பட்டமையுடன் அதற்கான அனுமதி வழங்கப்பட்டு நிதி பெறுவதற்கு முடியாத காணரத்தினால் திருத்தங்கள் செய்யப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு பெறப்படுவதற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேண்டியமை. |
| (ஆ) | கொத்மலையிலுள்ள பொறியியலாளர் அலுவலகத்தில் பழைய அணைக்கட்டு மாதிரிகள் நீக்கப்பட்டிருந்தமையுடன் புதிய அணைக்கட்டு மாதிரிகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ள அவதானிப்புப் புகைப்பட நிலையத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காகவும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,990,000 இற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன் ரூபா 2,060,000 செலவிடப்பட்டும் நிர்மாணம் திட்டமிடப்பட்ட அணைக்கட்டு மாதிரி 2019 மே வரையில் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை | ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத காரணத்தினால் குறிப்பிட்ட நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வில்லை. | ஒப்பந்தத்திற்கான காலப்பகுதியினுள் முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சூரியவெவப் பிரதேச முகாமைத்துவப் பிரிவில் அமைந்துள்ள இலக்கம் 6758 ஆன காணியின் அனுமதிப்பத்திரத்திற்கான வாடகைப் பணம் செலுத்தப்படாது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 107 இலிருந்து 112 வரையான பிரிவுகளின் பிரகாரம் அனுமதிப் பத்திரம் முறையாக இரத்துச் செய்யப்படாது மேலும் தனிப்பட்ட இருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்றுக்குரியவர் 2013 ஆம் வருடத்திலிருந்து மொத்த மதிப்பீட்டின் படி வரி செலுத்தியதுடன் மற்றைய தனிப்பட்டவரிடம் ரூபா 53,600 பெறவேண்டி இருப்பதாக காணப்பட்டது. | குத்தகைக்காரருக்கு நிலுவை வரிப்பணம் செலுத்தப்படாத காரணத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலுவைப் வரிப் பணம் அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஈ) | இலக்கம் 6438 ஆன காணிக்கு சூரியவெவப் பிரதேசத்திற்கான பிரிவிற்கான முகாமையாளர் பெறப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்திற்கு வதிவிட செயற்திட்ட முகாமையாளரினால் அது தவறான அனுமதிப்பத்திரம் எனக் கூறப்பட்டிருந்தது. அக்காணியில் 80 பேர்ச்சர்ஸ் ஆக்கிரமிக்கப்பட் காணிகளை சட்டரீதியாக்கப்படுவதன் கீழ் வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து வாடகை செலுத்தப்படவில்லை யென்பதுடன் மொத்த மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிட வேண்டிய நிலுவை தொகை ரூபா 111,680 ஆகும் வாடகை செலுத்தப்படாத காணியை இரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணி சம்பந்தமாக வெளியார் இருவருக்கிடையில் சச்சரவுகள் ஏற்பட்டமையால் அதன் காரணமாக குத்தகைப் பணம் அறவிடப்படுவதற்கு முடியாமல் இருந்தது. சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வதிவிட வியாபார முகாமைத்துவம் (வளவ்வ வலயம்) அறிவித்துள்ளது. | நிலுவை குத்தகைப் பணம் அறவிடுவதற்காக மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (உ) | சூரியவெவ பிரதேசத்தின் முகாமைத்துவப் பிரிவில் அமைந்துள்ள இலக்கம் 6407 ஆன காணி தனிப்பட்டவரினால் ஆக்கிரமிக்கப்பட்டதுடன் அது தொடர்பாகத் தேவையான செயற்பாட்டு நடவடிக்கை | சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக வதிவிட வியாபார முகாமைத்துவம் | ஆக்கிரமிக்கப்பட்ட காணியை விடுவிப்புச் செய்வதற்கான தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | எடுப்பதற்கு 2019 வருடம் வரையில் அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவில்லை. | (வளவ்வ வலயம்) அறிவித்துள்ளது. | எடுக்க வேண்டியமை. |
| (ஊ) | 'சீ' வலயத்தில் விவசாய முயற்சிகள் முகாமைத்துவ மத்திய நிறுவனத்தின் வருமானம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிராமையுடன் வங்கிக் கணக்கின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 87,856,695 ஆகக் காணப்பட்டது. அப்பணம் முதலீடு செய்வதற்கு உபயோகிக்கப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டது. | இப்பணம் வருமானமாக தலைமை அலுவலகத்தில் வருமானக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பணம் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (எ) | மீளாய்வாண்டில் அதிகார சபையால் ரூபா 1,193,155,190 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான பெறப்பட்டவை அவற்றுள் 63 சதவீதமான ரூபா 753,493,183 ஆகும். அதில் உடல்வளவை மற்றும் "சீ" வலயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானங்களின் வருமானம் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைந்திருந்தது. | அதிகாரசபையின் வருமானம் அதிகரிப்பது சம்பந்தமாக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் எழுத்து மூலமாக குறிப்பிட்ட அலுவலகர்களுக்கு இலக்குகளை வழங்குவதற்கும் அது சம்பந்தமான முன்னேற்றத்தைத் தொடர்ந்து மீளாய்வு செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்ட வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமையுடன் வருமானம் சேகரிக்கும் இலக்கை அடைய முடியாதவிடத்து அதற்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அது சம்பந்தமான சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியமை. |
| (ஏ) | மீளாய்வாண்டில் சிறு அளவான நீர் மின்சக்தி நிலையங்களிலிருந்து மகாவலி அதிகாரசபை ரூபா 330 மில்லியன் வருமானம் பெறுவதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதும், அவற்றுள் 60 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வு ஐயவினாவில் அவதானிக்கப்பட்ட மேல் மகாவலி நீர் வழங்கும் பிரதேசத்தில் அமைந்துள்ள 70 சிறிய அளவு நீர் மின்சக்தி நிலையங்களுக்கும் மற்றும் மொரகஹகந்த மின் நிலையம் மூன்றிற்குமான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்க | பட்டியல் இலங்கை மின்சார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மின்சார உற்பத்திக்காக அறவிடப்பட வேண்டிய பணம் இலங்கை மின்சார சபையால் இதுவரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் திறைசேரியின் தலையீட்டுடன் அப்பணம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை என்பதுடன் கணக்காய்வு தினம் வரையில் அந்த மின்நிலையங்களிலிருந்து எவ்வித வருமானத்தையும் சேகரிப்பதற்கு மகாவலி அதிகாரசபைக்கு முடியாமை காணப்பட்டது. மீளாய்வாண்டின் மே தொடக்கம் திசெம்பர் வரையில் காலப்பகுதிக்குள் மொரகஹகந்த சிறு அளவிலான நீர் மின்சக்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 28,566,405 கிலோ வாட் மின்சார சக்திக்காக ரூபா 496.8 மில்லியன் தொகை மின்சார சபையிடமிருந்து அறவிட வேண்டியுள்ளதாக கணக்காய்வு திகதி வரை அப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2018 வருடத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையின் உள்ளே 2019 வருடம் மே மாதம் வரையிலான அறவிடுவதற்கான மொத்தத் தொகை ரூபா 964.1 மில்லியனாகக் காணப்பட்டது. | | |
| (ஐ) | மாதுறுமய வலப்பக்க ஆற்றங்கரை அபிவிருத்திச் செயற்திட்டம் (பீ வலயம்) சம்பந்தமாக வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் காணப்படவில்லை. அப்பணம் பயன்படுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 935 மில்லியன் மதிப்பீட்டில் மாதுறுமய இடப்பக்க (பீ வலயம்) சிங்கபுரப் பிரிவில் மகாவலிகந்தை மற்றும் மல்வத்தை பகுதிகளில் மீள்குடியேற்ற செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்கான திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டக் காலம் 2016 வருட இறுதியில் முடிவுற்ற போதிலும் காலப்பகுதி நீடிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2018 வருடத்தில் 2019 வரை காலத்தை நீடிப்பதற்காக அமைச்சின் செயலாளரின் கோரிக்கை | பீ வலயத்தில் மாதுறுமயவின் இடப்பக்கமான மல்வத்த மற்றும் மகாவலி கங்கைக்குரிய பிரசேதத்தின் அபிவிருத்திக்காக 2013 வருடத்தில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டதுடன் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது மாதுறுமிய வடக்குப் பக்க செயற்திட்டத்தின் உபபிரிவாக செயற்படுத்தப்படுவதாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அனுமதி பெறப்பட்ட செயற்திட்டம் சம்பந்தமாக ஏற்பாடுகள் செலவிடப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் வருடத்தில் மாதுறுமய வலப்பக்க அபிவிருத்திச் செயற்திட்டம் மீண்டும் தேசிய மற்றும் வெளிநாட்டு நிதிச் செயற்திட்டமாக செயற்படுத்துவதற்காக வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 5,145,000 ஒதுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | வெலிமடை ஒன்றிணைந்த அபிவிருத்தி செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,957 மில்லியன் மதிப்பீட்டிற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டக்காலம் முடிவுற்ற போதிலும், அக்காலத்தை நீடிப்பதற்காக வரிசை அமைச்சின் மற்றும் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டமைக்கான சாட்சிகள் காணப்படவில்லை. 2021 வரையில் காலத்தை நீடிப்பதற்காக அமைச்சின் செயலாளரின் கோரிக்கை மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செயற்திட்டத்தின் மொத்தச் செலவினங்கள் ரூபா 2018.2 மில்லியன் மற்றும் பௌதீக முன்னேற்றம் 66 சதவீதமாக குறைந்திருந்தது. இச்செயற்திட்டத்தின் நோக்கம் போர் காரணமாக வசிப்பிடங்களை இழந்த 6,963 குடும்பங்களை மீளக்குடியேற்ற வேண்டியமை, 6,258 ஹெக்டயர் காணி அபிவிருத்தி செய்தல் மற்றும் 150 கி.மீ தெருக்கள் மற்றும் கீ.மீ 132 ஆன வீதி அபிவிருத்தி செய்தலுக்கான முன்னேற்றங்களை பரிசோதனை செய்வதற்கான செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை அல்லது செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 12,800,000 திறைசேரியினால் ஏற்பாடுகள் அனுமதிக்கப்படாது கிவுல் ஓயா அணைக்கட்டுச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டக் காலத்தை நீடிப்பதற்கான கோரிக்கை விடுக்கப்படுவதுடன் 2019 ஆம் வருடத்திற்காக ஏற்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் முன்னேற்றம் அமைச்சிற்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ரூபா 12.8 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டமை கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படவில்லை என்பதுடன் எல் வலயத்தில் அமைந்துள்ள ‘‘வெலிஎல’’ அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஆகும். எல் வலயத்தில் நீர்ப்பிரச்சினைக்காக திட்டமிடப்பட்ட செயற்திட்டமான கிவுல் ஓயா நீர்த்தேக்கத்தின் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. பிரதிப் பணிப்பாளரினால் (கிவுல் ஓயா) சூழல் மதிப்பீட்டு அறிக்கை தீர்க்கப்படுவதற்காக வேலை நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் பதவியணியினர் பயன்படுத்தப்பட்டு மேற்கூறிய அபிவிருத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டக் காலத்தை நீடிப்பதற்காகத் தேவையான அனுமதி பெறப்படுவதற்கு முன்னேற்ற மீளாய்வு செய்வதற்காக முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | வெலிகந்தை வதிவிட வர்த்தக முகாமைத்துவப் பிரதேசத்தின் முதலீட்டு செயற்திட்டத்திற்காக அளிக்கப்பட்ட 8 காணிகளில் 6 காணிகள் எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாது காணப்பட்டன. அதன் பிரகாரம் காணிகள் வழங்கும் அதிகாரசபையின் இலக்கிடப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. காணிகள் வழங்கப்படும் போது 1947 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளைச்சட்டத்தின் 199(3) ஆம் பந்தியின் பிரகாரம் பொதுமக்களின் எதிர்பார்ப்பிற்கான அவகாசம் வழங்கப்பட்டுக் குத்தகைக்கு விடுவதற்காக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் காணிகள் வழங்கப்படுவதற்கு முன்பு மகாவலி ஆரம்ப திட்டத்தில் திட்டமிடப்பட்ட காணி அமைந்துள்ள மற்றும் காணிச் சூழல் சம்பந்தமான அவதானம் செய்யப்பட்டு அக்காணி இலக்கிடப்பட்ட முதலீட்டு நோக்கத்திற்காக வழங்கப்பட்டமை முறையானதா என்பதைத் தீர்மானிப்பதற்காக தலைமை அலுவலகத்தின் காணிப் பாவனை திட்டமிடல் பிரிவின் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்காணிகளின் 4 காணிகள் ஆரம்ப திட்டத்தில் ரிதிதென்ன மற்றும் ஜயந்தியாய என்பவற்றின் காலணியினரின் காலனித்துவத்திற்காக உயர்ந்த இடமாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அந்நோக்கத்திற்கு முரணாக முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்தது. 3 காணித் துண்டுகள் குறிப்பிட்டவாறு அபிவிருத்தி செய்யப்படாமையின் அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்படுவதற்கான மீள் பரிசீலனை செய்யப்பட்டிருந்த | விசேட காரணத்திற்காக வழங்கப்பட்ட காணிக்காக மக்கள் எதிர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தலின்றி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணிப் பங்குகள் வழங்கப்பட்டிருந்தன. அபிவிருத்தியடையாத காணிகளை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பயங்கரவாதிகளின் தாக்குதலால் வீதிகளுக்கு அருகாமையில் காணிகளில் வசிக்கத் தொடங்கினர். | காணிகளை வழங்கும் அதிகார சபையின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் கணக்காய்வுத் திகதி வரையில் தெரிவானது முறையாக இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | 2013 ஆம் ஆண்டில் அது தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றைக் கட்டுபவதற்காக இலங்கை ஹிரா மன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த 35 ஏக்கர் காணி பின்னர் 2016 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகாரசபையினால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பூரண அனுமதியின்றி தனிப்பட்ட கம்பனியான பட்டிக்களோ கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட் என மாற்றி நீண்ட காலத்திற்கான குத்தகை உறுதி அக்கம்பனியின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட 35 ஏக்கருக்கும் மேலதிகமாக ஆக்கிரமிக்கப்பட்டதாக வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அப்பகுதி இற்றை வரையில் அதிகாரசபைக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டு மேலும், 45 ஏக்கர் ஹிரா மன்றத்தினால் வேண்டப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக முன்னால் நடவடிக்கைகளுக்காக அமைச்சின செயலாளரினால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பூரண அனுமதி பெறப்பட்டிருந்தது. அமைச்சரினால் கையொப்பம் மட்டுமே இடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக 45 ஏக்கர் வழங்கப்படுவதற்கான அனுமதி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை ஹிரா மன்றத்தினால் 2013 ஆம் வருடத்தில் தொழிற்சார் பயிற்சிப் பொறியியல் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்காகக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்குப் பணிப்பாளர் சபை அனுமதி பெறப்பட்டது. செயற்திட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படும் செயற்திட்டப் பெயர் படிகளோ கெம்பஸ் (தனியார்) வரையறுக்கப்பட்டது என மாற்றுவதற்கு 2016 இல் பணிப்பாளர் சபையின் அனுமதி வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் நான்கு குத்தகையின் கீழ் காணியை வழங்குவதற்காக 2018 இல் அனுமதிக்கப்பட்டது. மேலும் 45 ஏக்கர் வழங்குவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. | முறையான அதிகாரமின்றி காணிகளை விற்பதற்கு அனுமதி அளித்த சம்பந்தப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தப்படுவதுடன் தேவையற்ற வகையில் கைப்பற்றப்பட்ட காணிகளை மீண்டும் அதிகார சபைக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. அரச காணிகள் விரோதப்படுத்தலானது அரச கொள்கைகளுக்கு இணங்க மற்றும் அரசக் காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டியமை. |
| (க) | வெலிகந்த வலயத்தினுள் காணி வழங்கப்பட்ட முதலீட்டு செயற்திட்டங்களில் 2018 திசெம்பர் 31 அந் திகதியில் ரூபா 31,114,866 ஆன தொகை | பீ வலயத்தினுள் காணி வழங்கப்பட்ட செயற்திட்டங்களில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 31,114,866 | நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. | ஆன தொகை நிலுவை வாடகையாக அறவிடப்பட்டது | |
| (கா) | 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் இரத்மலானை, கல்தேமுல்லவில் அமைந்துள்ள காணி, கட்டிடம் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 9,450,000 ஆன வாடகைப் பணம் அறவிடப்படாததுடன் பயன்படுத்தப்படும் மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்காக பணம் கணக்கிடப்பட்டு அறவிடுவதற்காக பொருத்தமான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. | இது சம்பந்தமாக இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப் படுவதுடன் அதில் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் கூற்றின் படி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இற்றை வரையில் நிதியம் மற்றும் ஏற்பாடுகள் பற்றாக்குறையால் வாடகைப் பணத்தில் 50% செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருக்கின்றது. | குத்தகைப் பணம், மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் வருடாந்த பெறுகைத் திட்டம் அல்லது மொரகஹகந்த செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட திட்டம் உள்ளடக்கப்படாது அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் மொரகஹகந்த அணைக்கட்டின் மாதிரியைக் கட்டுவதற்கு ரூபா 2,580,000 செலவிடப்பட்டது. அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமையுடன் இத் தொழிற்பாட்டிற்காக ஏற்பாடு வழங்குவதற்காக அமைச்சின் செயலாளரினால் மொத்த மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு வேண்டப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மொரகஹந்த செயற்திட்டத்திலிருந்து மீள் நிரப்பப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு அமைச்சின் செயலாளரினால் | இது விசேட கலைப்படைப்பு நிர்மாணம் என்பதால் மொத்த மதிப்பீட்டை தயாரிப்பதில் சாத்தியமில்லை. 6 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறைந்தளவு விலை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. அதிகாரசபை செலவினங்களைச் செய்ததுடன் செயற்திட்டத்திலிருந்து அவற்றை மீள் நிரப்புமாறு கோரப்பட்டுள்ளது. | அரச பெறுகை, வழிகாட்டியின் பிரமாணத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டியமை |

சமர்ப்பிக்கப்படாமையால் செயற்திட்டத்தினால் மீள் நிரப்பப்படவில்லை. அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.5.1(அ) பந்திக்கு முரணாக அல்லது அனுமதிக்கப்பட்ட செலவு மதிப்பீட்டிற்கு முரணாக 2018 யூலை 10 ஆந் திகதி பெறுகைக் குழுவினால் அப்பெறுகை நடவடிக்கைகளுக்காக அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையால் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்படாது பீ வலயத்திலுள்ள 19 கட்டிடங்கள், 11 தலைமை அலுவலகக் கட்டிடங்கள், வளவ வலயத்திலான 07 கட்டிடங்கள் மற்றும் ஆரம்ப வேலை நிர்வாக செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புப் பிரிவின் 49 கட்டிடங்கள் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன. | தலைமை அலுவலகத்தில் 5 கட்டிடங்களுக்கு நிலுவை வாடகை செலுத்துவதற்காக அறிவித்தல் செய்யப்பட்டுள்ளதுடன் 2 கட்டிடங்களை நீண்ட காலக் குத்தகையின் அடிப்படையில் வழங்கப்படுவதற்கான அனுமதி வழங்குதல் மற்றும் 5 கட்டிடங்களை மீண்டும் மதிப்பீடு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதற்கும் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. பீ வலயத்தில் ஒரு உத்தியோகபூர்வ இல்லத்தை இடித்து 17 கட்டிடங்களுக்காக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வெளித் தரப்பினருக்கு காணி மற்றும் கட்டிடங்களை வழங்கும் போது ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அதிகாரசபைக்கு உரித்தான மகாவலி பாதுகாப்பு படையில் சேவையாற்றும் பதவியணியினரில் 44 பேர் 2015 ஆம் ஆண்டிலிருந்து நானாவித அரச நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 12 பேர் 2018 வருடத்திற்குள் | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் மகாவலி பாதுகாப்புப் படையில் சேவை புரியும் அரச நிறுவனங்களினால் விடுவிக்கப்பட்ட அலுவலகர்களுக்கு வழங்கப்படும் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவான ரூபா | குறிப்பிட்ட செலவுகள் மீள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் பாதுகாப்பு படையில் சேவைக்கு அறிக்கையிட்டிருந்தனர். அவ் அலுவலகர்களுக்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 66,141,532 என்பதுடன் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவுகள் ரூபா 31,448,940 ஆனவை குறிப்பிட்ட நிறுவனங்களிடமிருந்து மீள் நிரப்பப்படுவதற்கு 2019 பெப்ரவரி 13 திகதி வரையில் அதிகாரசபையால் முடியாமல் போயிருந்தது. | 31,448,940.00 ஆன தொகையை மீள்நிரப்புவதற்காக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகாரசபைக்கு உரித்தான தலைமை அலுவலகத்தின் 28 அலுவலகர்கள், மொரகஹந்த வலயத்திலிருந்து ஒருவரும், பீ வலயத்தில் 3 அலுவலகர்கள், ஹீருலுவேவா வலயத்தில் ஒரு அலுவலர் அடங்கலாக 33 பேர் வரிசை அமைச்சு மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். வரிசை அமைச்சிற்கு மற்றும் வெளிநிறுவனங்களுக்கு முறையே விடுவிக்கப்பட்ட 19 அலுவலகர்கள் மற்றும் 14 பேருக்குமாக செலவிடப்பட்ட ரூபா 22,732,617 மற்றும் 12,761,670 ஆன சம்பளம், மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவுகள், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மீள் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பளம் மீள் நிரப்பப்பட்டதுடன் வரிசை அமைச்சு மற்றும் வேறு அமைச்சுக்களால் விடுவிக்கப்பட்ட அலுவலகர்களின் சம்பளம் மேலதிக நேர பிரயாணச் செலவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட செலவுகள் மீள் நிரப்பப்டுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டில் குறிப்பிட்ட அதிகாரசபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட தகவல்கள் பணிப்பாளரிடம் (திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைத்தல்) காணப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான படிமுறைகளை எடுக்க வேண்டியமை. |